# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.142/2025** |
| Prosecution witness | : | P.W.1 |
| Name | : | பன்னீர்செல்வம் |
| Father's /Husband Name | : | அந்தோணிசாமி |
| Village | : | ஆழியன் தோப்பு |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 52 |
| Occupation | : | விவசாயி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 16th day of February 2026.
Accused present.

**<u>சாட்சி மனுவின் பேரில் குவிமுச 311ன் கீழ் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை</u>**

நான்சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று எழுத்துமூலமாக புகார் காவல் நிலையத்தில் கொடுத்தேனா என்றால் நான் மருத்துவமனையில் இருந்தேன். போலீசார் வந்து வாக்குமூலம் பெற்றார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அதே நாளில் ஆஜர் எதிரி என் மீது அவரை தாக்கியதாக புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அப்போது நான் மருத்துவமனையில் இருந்தேன். எதிரி கொடுத்த புகார் பொறுத்து மருத்துவமனையிலிருந்து வந்ததும் முன்ஜாமீன் எடுத்துக்கொண்டேனா என்றால் இல்லை. ஆஜர் எதிரிக்கு ஏற்பட்ட காயத்தினை பொறுத்து போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. நான் ஆஜர் எதிரிமீதும், எதிரி என் மீதும் பல புகார்கள் மாறி மாறி கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் எதிரி வீட்டிற்கும் பின்புறம் ஆற்று கரை உள்ளது என்றால் சரிதான். அந்த ஆற்றிலிருந்து மணலை திருடியதாக எரவாஞ்சேரி காவல் நிலையத்தில் என் மீது வழக்கு உள்ளதா என்றால் இல்லை. ஆஜர் எதிரி வீட்டில் ஆண் வாரிசு கிடையாது என்றால் இல்லை. நான் எதிரி வீட்டிற்கு செல்லும் மின்

இணைப்பு ஒயரை துண்டித்துவிட்டதாக ஆஜர் எதிரி என் மீது புகார் கொடுத்துள்ளாரா என்றால் கொடுத்துள்ளார். ஆனால் நான் அதை செய்யவில்லை. இரண்டு பேருக்கும் உள்ள நிலத்தை நிலஅளவையர் மூலம் அளவீடு செய்ய வந்த போது நான் அரிவாளை வைத்துக்கொண்டு பிரச்சனை செய்தேன் என்று சொன்னால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் இரத்தம் கசிந்து கீழே கிடந்ததா என்றால் நான் மயக்கம் போட்டதால் அதை பார்க்கவில்லை. நான் எவ்வளவு நேரம் மயக்க நிலையில் இருந்தேன் என்றால் சுமார் 3 மணிநேரம் இருக்கும். நான் சம்பவம் நிகழ்ந்த நேரத்திலிருந்து சுமார் 3 மணி நேரம் நினைவு திரும்பிய பிறகு தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். 108 ஆம்புலன்ஸ் எப்போது வந்தது என்றும் முதன் முதலில் எந்த மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றாலும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். திருவாரூர் மருத்துவனையில் தான் நினைவு வந்தது. எதிரி வீட்டு கொல்லைக்குள் அத்துமீறி நுழைந்த போது ஏன் என் கொல்லைக்குள் வருகிறீர்கள் என்று கேட்டதால் கோபமுற்று கீழே கிடந்த முள் தாங்கி கட்டையை எதிரியை தாக்க முயன்ற போது அவர்கள் தடுத்ததால் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கு ஏற்பட்ட காயத்திற்கு கும்பகோணம் மருத்துமனையில் சிகிச்சை பெற்று அவர்கள் கொடுத்த புகாரிலிருந்து தப்பிப்பதற்காக பின்னால் இந்த வழக்கு என்னால் ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி என்னை அரிவாளால் தாக்கவும் இல்லை காயப்படுத்தவும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.16 10:50:16 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.